18th August 1960]

Palar

* 263 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 210-க்கு 1959-ம் ஆண்டு டிசம்பர்மீ 15உ. அளித்த பதிலையொட்டி பாலாற்றில் தண்ணீர் கொண்டுவரும் பிரச்சனையைக் குறித்து தென் மண்டலக் கவுன்சில் கூட்டத்தில் பேசப்பட்டதா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : சார், இதற்கு முன்னால் கேட்ட கேள்விக்கு தென் மண்டல கவுன்சிலில் இதைப்பற்றி பேசக் கூடும் என்று சொல்லப்பட்டது. இன்னும் பாலாற்றுப் பிரச்னையைப்பற்றிப் பேசவில்லையென்றால், மத்திய சர்க்காரை வற்புறுத்தி மைசூர் சர்க்காருக்கும், நமது மாநில சர்க்காருக்கும் இருக்கும் உடன்பாடு சரியாக இருக்கிறதா என்று பார்த்து, மத்திய சர்க்கார் தலையிட்டாகிலும் பாலாற்றுத் தண்ணீரைக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே இந்த மன்றத்தில் குறிப்பிட்டதுபோல் மத்திய சர்க்காரைக் கலந்து பேசியிருக் கிறோம். இந்த மாநிலத்தைப் பொறுததவரை மத்திய சர்க்கார் இடையூறு செய்யவில்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Alangulam tank

* 264 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI D. S. AUTHIMOOLAM) : Will the Hon the Minister for Works be pleased to state the present stage of the work concerning the supply channel from Nagalkulam tank to Alangulam tank in Tenkasi taluk?

THE HON. SRI P. KAKKAN : The plans and estimates for Rs. 3,94,000 for the scheme have been received from the Chief Engineer (Irrigation). The Collector's remarks on the revenue, financial and Grow More Food aspects of the scheme are awaited through the Board of Revenue.

SRI A. R. SUBBIAH MUDALIAR : பல வருஷ காலமாக இந்தத் திட்டம் தடைபட்டு வருகிறது. இதற்கு ஏதாவது ஒரு காலவரையறை ஏற்படுத்தி நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : கலெக்டரின் ரிமார்க் வந்த உடனே முடிவு எடுக்கப்படும்.